
பக்கங்கள் 17+3

மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | மார்கழி 09 புதன்கிழமை 24.12.2025 | அதிர்வு 147

## 'மட்டக்குளி குடு ரொசான்' துப்பாக்கியுடன் சிக்கினார்



போதைப்பொருள் கடத்தல்காரரான "மட்டக்குளி குடு ரொசான்" என்பவர் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் இன்று கைது செய்யப்பட்டுள்ளார். 02

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



### தமிழ் மக்களின் காணிகளைக் கைப்பற்றி

# போலியாக அமைக்கப்பட்ட தையிட்டி திஸ்ஸ விகாரை!

### நயினாதீவு நாகவிகாரையின் விகாராதிபதி பகிரங்கக் குற்றச்சாட்டு

"யாழ். வலிகாமம் வடக்கு - தையிட்டிப் பகுதியில் திஸ்ஸ விகாரை போலியாகவே அமைக்கப்பட்டுள்ளது. இந்தப் போலி விகாரை அமைந்துள்ள காணியானது தமிழ் மக்களுக்குச் சொந்தமானது."

- இவ்வாறு நயினாதீவு நாகவிகாரையின் விகாராதிபதி நவதலகல பதும தேரர் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில், 02

# அர்ச்சுனா எம்.பி. பிணையில் விடுவிப்பு



கொழும்பு, கோட்டைபொலிஸாரால் இன்று முற்பகல் கைது செய்யப்பட்ட யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா பிற்பகல் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

கோட்டை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தனது கடமையைச் செய்துகொண்டிருந்தபோது, அவருக்கு இடையூறு விளைவித்த சம்பவம் தொடர்பில் அர்ச்சுனா எம்.பி. மீது வழக்குத் தொடரப்பட்டது.

ஏற்கனவே இந்த வழக்கில்கைதுசெய்யப்பட்டுபிணையில் செல்ல அனுமதிக்கப்பட்ட அர்ச்சுனா எம்.பி., நேற்றைய வழக்கு விசாரணையின்போது நீதிமன்றத்தில் முன்னிலையாகியிருக்கவில்லை. அதையடுத்து அவருக்கு 02



# யாழில் போதைப்பொருட்களுடன் கைது செய்யப்பட்ட மாணவன் உட்பட 10 பேர் புனர்வாழ்வு நிலையத்துக்கு!

யாழ்ப்பாணம் நகர் பகுதியில் போதைப்பொருட்களுடன் கைது செய்யப்பட்ட 17 வயது மாணவன் உள்ளிட்ட 10 பேர் புனர்வாழ்வு நிலையத்துக்கு இன்று அனுப்பப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் பொலிஸ் தலைமையகம் இதனை உறுதிப்படுத்தியுள்ளது.

யாழ்ப்பாணம் நகர் பகுதியில், பொலிஸார் நடத்திய விசேட சோதனை நடவடிக்கையின் போது மேற்படி 10 பேரும் நேற்று கைது செய்யப்பட்டனர்.

இதன்போது அவர்களிடமிருந்து, ஐஸ் போதைப்பொருள், போதை மாத்திரைகள் மற்றும் கேரள கஞ்சா என்பன பறிமுதல் செய்யப்பட்டன என்று யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### போலியாக அமைக்கப்பட்ட...

“திஸ்ஸ விகாரை அமைக்கப்பட்டுள்ள காணியானது காங்கேசன்துறை – தையிட்டி பகுதியைச் சேர்ந்த தமிழ் மக்களுக்குச் சொந்தமானதாகும்.

யாழ்ப்பாணத்தில் யுத்த காலத்தின்போது தமிழ் மக்களின் காணிகள் கைப்பற்றப்பட்டன. அதன் பின்னர் அங்கு சட்டவிரோதமாகவே திஸ்ஸ விகாரை நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இந்த உண்மையை, இங்கு யுத்த காலத்தில் இருந்து மிக நீண்டகாலமாக வாழும் நாகவிகாரையின் விகாராதிபதியான எனக்கு மட்டுமே தெரியும். ஆகவே, எமது நாட்டில் உள்ள மக்கள் இந்த விடயம் தொடர்பில் தேவையற்ற சிக்கல்களை ஏற்படுத்திக் கொள்ளத் தேவையில்லை. விடயங்களை ஆராய்ந்து நாம் செயற்பட வேண்டும்.

இந்தநிலையில் வடக்குப் பிராந்தியத்துக்கான பிரதான சங்கநாயக்க தேருக்கான பதவியை, போலியாக அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரையின் விகாராதிபதிக்குப் பெற்றுக் கொடுத்துள்ளனர். பௌத்த தர்மத்துக்கு மாறாக அவருக்கு அந்தப் பதவி வழங்கப்பட்டுள்ளது.

நான் 53 வருடங்களாக இங்குள்ள தமிழ் மக்களுடனேயே நயினாதீவிலேயே தங்கியுள்ளேன். மிகவும் சமாதானமாகவும் அன்பாகவும் தமிழ்ச் சகோதரர்களுடன் நாங்கள் ஒன்றாக வாழ்கின்றோம்.

எனினும், தற்போது தையிட்டி பகுதிக்குத் தேரர் ஒருவர் வருகை தந்து, தமிழ் மக்களின் காணிகளை அடாத்தாக கையகப்படுத்தி, விகாரைக்கான புதிய கட்டடங்களை நிர்மாணித்து வருகின்றார். இவ்வாறான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படக்கூடாது என்பதே எமது நிலைப்பாடு.

எனவே, இலங்கைவாழ் அனைத்து மக்களும் எவ்வித சிக்கல்களையும் ஏற்படுத்திக் கொள்ளாது, சிந்தித்துச் செயற்பட வேண்டும்.

அரசு இந்த விடயத்தில் தலையீடு செய்து நடவடிக்கை எடுப்பது சிறந்தது என்பது எனது கருத்தாகும்.

இந்த விடயம் தொடர்பில் தேவையற்ற வகையில் கருத்துக்களைப் பகிர வேண்டாம் என ஏனைய தேரர்களிடம் கேட்டுக்கொள்கின்றேன்.

அனைவரும் ஒன்றிணைந்து கலந்துரையாடித் தீர்வை பெற்றுக் கொடுக்க வேண்டும். அல்லாவிடின், இந்த விடயம் பெரும் பூதாகரமாகும்.

அதன்போது தமிழ் மக்களுடன் இணைந்து செயற்பட வேண்டிய தேவை எங்களுக்கு ஏற்படும் என்பதைக் கூறிக் கொள்கின்றேன்.” – என்றார்.

### அர்ச்சுனா எம்.பி....

எதிராக நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்திருந்தது.

பிடியாணை உத்தரவுக்கு அமைய, அர்ச்சுனா எம்.பி. இன்று முற்பகல் கோட்டை பொலிஸ் நிலையத்தில் சரணடைந்ததை அடுத்து அவரைப் பொலிஸார் கைது செய்து பிற்பகல் கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தினர்.

இதன்போது அவரைப் பிணையில் விடுவிக்க கோட்டை நீதிவான் உத்தரவிட்டார்.

### மட்டக்குளி...

கொழும்பு, மாளிகாவத்தைப் பகுதியில் வைத்தே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடமிருந்து துப்பாக்கியொன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது.

அவரிடம் விசாரணைகள் முன்னெ




# தெற்குக் கடலில் படகில் இருந்து மீட்கப்பட்ட ரூ. 200 கோடி பெறுமதியான போதைப்பொருள்

இலங்கையின் தெற்குப் பகுதியில் கைப்பற்றப்பட்ட ஆழ்கடல் மீன்பிடிப் படகில் இருந்து பெருந்தொகையான ஐஸ் மற்றும் ஹெரோயின் போதைப் பொருள் என்பன மீட்கப்பட்டன.

இவற்றின் சந்தைப் பெறுமதி 200 கோடி ரூபா வரை இருக்கும் என்று மதிப் பிடப்பட்டுள்ளது.

ஆழ்கடல் மீன்பிடிப் படகொன்றில் போதைப்பொருள் கடத்தப்படுகின்றது என்று கடற்படையினருக்குப் புலனாய்வுத் தகவல் கிடைக்கப்பெற்றது.

இதையடுத்து அந்தப் படகு பரிசோத னைக்குஉட்படுத்தப்பட்டவேளை,போதைப் பொருள் கைப்பற்றப்பட்டது. படகில் இருந்த ஐவர் கைது செய்யப்பட்டனர்.

மேலதிக விசாரணைகளுக்காக கப்பல் இன்று காலை திக்ஹோவிட்ட மீன்பிடி துறைமுகத்துக்குக் கொண்டு வரப்பட்டது.

11 பொதிகளில் இருந்தே ஐஸ் மற் றும் ஹெரோயின் என்பன மீட்கப்பட் டன.

169 கிலோ ஐஸ் போதைப்பொரு ளும், 21 கிலோவுக்கு மேற்பட்ட ஹெரோ யினும் பொதிகளுக்குள் இருந்துள் ளன என்று கடற்படையினர் தெரிவித் தனர்.

அதேவேளை, போதைப்பொருள் விற் பனையில் ஈடுபடுபவர்கள் சட்டத்தின் பிடியில் இருந்து தப்ப முடியாது என்று மீன்பிடித் துறைமுகத்துக்கு சென்றிருந்த பாதுகாப்பு பிரதி அமைச்சர் தெரிவித்தார்.

போதைப்பொருளை ஒழிப்பதற்கு மக்களின் ஒத்துழைப்பு அவசியம் எனவும், மக்களால் வழங்கப்படும் தகவலின் இரகசியத்தன்மை பாதுகாக்கப்படும் எனவும் அவர் மேலும் கூறினார்.



# யாழில் இன்று உருக்குலைந்த நிலையில் கரையொதுங்கிய ஆண் ஒருவரின் சடலம்

## அடையாளம் காண உதவுமாறு பொலிஸார் கோரிக்கை

**(ந.லோகதயாளன்)**

யாழ். பருத்தித்துறை – இன்பர்சிட்டி கடற்கரையில் உருக்குலைந்த நிலை யில் ஆண் ஒருவரின் சடலம் இன்று கரையொதுங்கியுள்ளது.

இது தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ள பருத்தித்துறைப் பொலி ஸார், சடலத்தை அடையாளம் காணப் பொதுமக்களின் உதவியை நாடியுள்ள னர்.

சடலத்தில் நீல நிற டெனிம் காற்சட்டை யும், பிறவுண் கலர் ரீ சேர்ட்டும் காணப் படுகின்றது என்று பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

இதேவேளை, இந்தச் சடலம் இந் தியா – இராமேஸ்வரம் மீனவருடைய தாக இருக்கலாம் எனவும் சந்தேகிக்கப் படுகின்றது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## சரியான நியமனம் அவசியம்

'பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்த கதை' என்பார்கள். அந்த மாதிரி புயல், வெள்ளம், மண்சரிவு என்ற பேரிடர்களை எதிர்கொண்ட இலங்கை நாட்டை அதிலிருந்து மீட்கும் பெரும் நிதி கட்டமைப்பு நடவடிக்கைகள் கட்டவிழ வேண்டிய சந்தர்ப்பத்தில் அதனை பொறுப்பேற்று கணக்காய்வு செய்யும் உயர் அலுவலகர் இல்லாத அந்தர - அவல - நிலையில் நாடு தள்ளாடுகின்றது.

பேரிடரால் பாதிப்புற்றவர்களையும் நாட்டையும் அந்த அழிவுகளிலிருந்து மீட்டெடுப்பதற்குப் பெருந்தொகை நிதி ஒரே சமயத்தில் செலவிடப்பட வேண்டிய நிலைமை உருவாகி இருக்கின்றது.

சாதாரண அவசர நிவாரண பொருள் விநியோகத்திலேயே குளறுபடிகள், முறைகேடுகள், பின் கதவு நடவடிக்கைகள் தாராளமாக இடம்பெறுகின்றன என்ற குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

இந்தச் சமயத்தில், மக்களின் மீள் எழுச்சிக்கான நிவாரண விநியோகம், தொழில் முயற்சிகளை புனரமைப்பதற்கான நிதி உதவிகள், கடன்கள் மற்றும் பாலங்கள், வீதிகள் கட்டுமானங்கள் என்று பல்லாயிரம் கோடி ரூபா புனரமைப்பு நிதி ஏதோ ஒரு வழியில் திரட்டப்பட்டு செலவிடப்பட வேண்டிய கட்டாயம் எழுந்திருக்கின்றது.

இந்தச் சமயத்தில்தான் நாடு நிரந்தரமான கணக்காய்வாளர் நாயகம் இல்லாத நெருக்கடியில் சிக்குப்பட்டிருக்கின்றது. கடந்த எட்டு மாதங்களாக ஜனாதிபதி பரிந்துரைத்த நான்கு பேரை இந்த பதவிக்கு நியமிக்கத் தகுதியற்றவர்கள் என்று அரசமைப்புக் கவுன்ஸில் தொடர்ந்து நிராகரித்துவிட்டது. கடந்த ஆறாம் திகதியிலிருந்து பதில் கணக்காய்வாளர் நாயகம் கூட நாட்டுக்கு இல்லை என்றாகிவிட்டது.

இது மிக முக்கியமான ஒரு பதவி. அதனால்தான் அரசமைப்பு கவுன்ஸில் - குறிப்பாக அதன் சிவில் பிரதிநிதிகள் - அந்த நியமனத்தில் மிகக் கறாராக இருக்கிறார்கள். ஜனாதிபதி தன்னுடைய அரசியல் நிலைப்பாடுகளை விட்டுக் கொடுத்து, நீதி, நேர்மையானவரை - இந்த விடயத்தைக் கையாளத் தகுதியுடையவரை - அதற்கான பாரம்பரியங்கள், அனுபவங்கள் கொண்டவரை - பரிந்துரைக்க முன்வர வேண்டும்.

அது மாத்திரமல்ல, இலங்கை அரசாங்கம் ஏற்கனவே Rebuilding Sri Lanka Fund என்ற நிதியத்தை ஆரம்பித்துள்ளது. ஆனால் அது இன்னும் நாடாளுமன்றத்தினால் கூட்டிணைக்கப்படவில்லை.

இத்தகைய விடயங்களில் பல கோடி ரூபா பெறுமதியான தொகை குறுகிய காலத்தில் செல்விடப்படும் போது, பெரும் முறைகேடுகளுக்கும் ஊழலுக்கும் கையாடலுக்கும் இது வழிவகுக்கும் என்று எச்சரிக்கப்படுகின்றது.

சுனாமி ஆழிப்பேரலை பிரச்சினை ஏற்பட்டபோது இதே போன்ற மீள் கட்டுமான முயற்சியை ஒட்டி 'ஹெல்பிங் ஹம்பாந்தோட்டை' என்ற பெயரில் கட்டவிழ்ந்த முறைகேடுகள் இலங்கைக்கு அனுபவங்களாக உள்ளன.

ஆகவே, அரச சொத்துக்கள், இதர செலவுகள் தொடர்பாக கணக்காய்வு நடவடிக்கைகள் கண்ணுக்குள் எண்ணெய் விட்டுக் கொண்டு அட்டவதானமாக கவனிக்கப்பட வேண்டிய சமயத்தில் - அந்தத் துறையை செயலிழக்கச் செய்யும் விதத்தில் ஜனாதிபதி நடந்து கொள்ளக் கூடாது.

இந்த நியமனம் தொடர்பாக சர்வதேச நியமங்கள், இந்தப் பதவி தொடர்பாக இதுவரை காலமும் பேணப்பட்டு வந்த பாரம்பரியங்கள், நடைமுறைகள், மரபுகள் போன்றவற்றை உள்வாங்கி தகுதியானவரை பரிந்துரைக்க ஜனாதிபதி முன் வர வேண்டும்.

இதில் தொடர்ந்து ஜனாதிபதி தவறிழைத்து, அதன் மூலம் ஊழல், முறைகேடுகள், தாராளமாக தலைவிரித்தாடுமானால், அதற்கு ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவும் பொறுப்பு ஏற்க வேண்டும் என்பதை நேரத்துடனே சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.





# மன்னாரில் வயோதிபர்களை மகிழ்வித்த ஒளிவிழா நிகழ்வு

**(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)**

மாந்தை மேற்கு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் ஏற்பாடு செய்த ஒளி விழா நிகழ்வு திங்கட்கிழமை மன்னார் பட்டி தோட்டத்தில் அமைந்துள்ள வயோதிபர் இல்லத்தில் இடம்பெற்றது.

மாந்தை மேற்கு சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ஒஸ்மன் டெனி தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் விருந்தினராக மன்னார் மறை மாவட்ட ஓய்வு நிலை ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ கலந்து கொண்டார்.

ஓய்வு நிலை ஆயர் தலைமையில் குறித்த வயோதிபர் இல்லத்தில் விசேட திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து ஒளி விழா நிகழ்வுகள் இடம்பெற்றன.மாந்தை மேற்கு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை அலுவலகர்கள் இணைந்து ஒளி விழா நிகழ்வை முன்னெடுத்தனர். குறித்த வயோதிபர் இல்லத்தில் உள்ள வயோதிபர்களை மகிழ்விக்கும் வகையில் கரோல் பாடல்களும் இசைக்கப்பட்டன.

இதன்போது குறித்த வயோதிபர் இல்லத்தில் உள்ள வயோதிபர்கள் ஆடல், பாடல்களில் ஈடுபட்டனர். இதனை தொடர்ந்து வயோதிபர்களுக்கு ஓய்வு நிலை ஆயர் மற்றும் எழுத்தூர் பங்குத்தந்தை லோரன்ஸ் அடிகளார் ஆகியோர் இணைந்து அன்பளிப்புப் பொருள்களையும் வழங்கி வைத்தனர்.

நாடு பூராகவும் அண்மையில் ஏற்பட்ட புயல் மற்றும் வெள்ளம் காரணமாக மக்கள் மிகவும் பாதிப்பு அடைந்துள்ள நிலையில் இவ்வருடம் மன்னார் மறைமாவட்ட பங்குகளில் ஒளி விழாவை நடத்தது அதற்கான செலவுகளை பாதிப்புக்கு உள்ளாகியுள்ள மக்களுக்கு பகிர்ந்து அளிக்குமாறு மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு அந்தோனிப் பிள்ளை ஞானப்பிரகாசம் ஆண்டகை அறிவுறுத்தி உள்ளார்.

இந்த நிலையில் பல்வேறு சுமைகளையும் துன்பங்களையும் மனதில் சுமந்த நிலையில் குறித்த வயோதிபர் இல்லத்தில் வசித்துவருகின்ற வயோதிபர்களை மகிழ்விக்கும் வகையில் மாந்தை மேற்கு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை குறித்த ஒளி விழா நிகழ்வை ஏற்பாடு செய்தது.





# கிராஞ்சி - வேரவில்- வலைப்பாடு வீதிப்பிரச்சினை தீர்க்கப்படுமா?



க.அரவிந்தன்,
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கிராஞ்சி, வேரவில் மற்றும் வலைப் பாடு ஆகிய கிராமங்கள் பல வருடங்கள் கடந்து இப்பகுதிகளை இணைக்கும் பிரதான வீதியானது புனரமைக்கப்படாமல் காணப் படுகிறது.

இதனால் அப்பகுதி மக்களின் அன்றாட வாழ்வை முடக்கியுள்ளது. இவ்வீதிப் பிரச்சினை வெறும் போக்கு வரத்துச் சிக்கலாக மட்டுமன்றி, சுகாதாரம், கல்வி மற்றும் பொருளாதாரம் எனப் பல்வேறு தளங்களில் பாரிய நெருக்கடிகளை உருவாக்கி வருகின்றது.

இதனடிப்படையில் வீதியின் நிலை மற்றும் சுகாதாரப் பாதிப்புகள் பற்றி நோக்குகையில், தற்போது இவ்வீதியானது பெரும் பள்ளங்களாலும், சிதைவடைந்த மண் அடுக்குகளாலும் மிகவும் மோசமான நிலையில் காணப்படுகிறது.

இது கோடை காலத்தில் அதீத தூசுப் படலங்களை உருவாக்கி, மக்களுக்கு ஆஸ்துமா, இருமல் போன்ற சுவாசப் பிரச்சினைகளை ஏற்படுத்துகிறது. மாறாக, மழைக் காலங்களில் வீதி முழுவதும் சேறும் சகதியுமாக மாறி, நீர் தேங்கி நிற்பதால் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலைமை ஏற்படுகிறது.

டெங்கு, சிக்கன்குனியா போன்ற நோய்களைப் பரப்பும் நுளம்புகளின் பெருக்கமும் அதிகரித்துள்ளது. முறையான வடிகால் அமைப்போ அல்லது தார் வீதியோ இல்லாதது மக்களின் அடிப்படை ஆரோக்கியம் பெரும் சவாலாக மாறியுள்ளது.

அத்துடன் இக்கிராமங்களில் மூன்று பாடசாலைகள் காணப்படுவதுடன், ஏராளமான மாணவர்கள் உயர் கல்விக்காகப்பல்கலைக்கழகங்களுக்கும் சென்றும் வருகின்றனர். எனினும், வீதியின் மோசமான நிலையால் மழை காலங்களில் மாணவர்கள் கல்வி நிலையங்களுக்குச் செல்ல முடியாத சூழல் நிலவுகிறது. போக்குவரத்துச் சிரமங்களால் மாணவர்கள் வீடுகளிலேயே முடங்குவதால் அவர்களின் கல்வித் தொடர்ச்சி பாதிக்கப்படுகிறது. ஒரு சமூகத்தின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் கல்வி, இத்தகைய உட்கட்டமைப்பு குறைபாடுகளால் கேள்விக் குறியாக்கப்படுவது மிகவும் கவலைக்கு உரிய விடயமாகும்.



பொருளாதாரப் பின்னடைவும் வாழ்வாதாரப் பாதிப்பும் கூட இதனால் ஏற்படுகிறது.

விவசாயம் மற்றும் கடற்றொழிலை முதன்மை வாழ்வாதாரமாகக் கொண்ட இந்தப் பகுதி மக்கள், தமது உற்பத்திப் பொருள்களைச் சந்தைப்படுத்துவதில் பெரும் இழப்புகளைச் சந்திக்கின்றனர். வீதிப் பாதிப்பால் வாகனங்களை இயக்குவது கடினமாக இருப்பதோடு, போக்குவரத்துச் செலவுகளும் அதிகரிக்கின்றன. குறிப்பாக, மழை காலங்களில் வீதிகள் முற்றாகப் பயன்படுத்த முடியாத நிலைக்குச் செல்வதால், உணவுப் பொருள்கள் மற்றும் அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் பாரிய தட்டுப்பாடுகள் ஏற்படுகின்றன. இது இந்தப் பகுதியின் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சியை வெகுவாகப் பாதித்துள்ளது.

இந்த வீதியின் மோசமான நிலையால் அவசர கால மருத்துவச் சேவைகள் மற்றும் தீயணைப்புச் சேவைகள் உரிய நேரத்தில் கிராமங்களுக்குள் வர முடிவதில்லை. நோயாளிகளை மருத்துவமனைக்குக் கொண்டு செல்வதில் ஏற்படும் தாமதம் சில நேரங்களில் தவிர்க்கப்படக் கூடிய உயிரிழப்புகளையும் தவிர்க்க முடியாது போகிறது என்று மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கிராமங்களுக்கு இடையிலான சமூகத் தொடர்புகள் குறைந்து வருவதோடு, பொதுவான ஒன்றுகூடல்களில் மக்கள் பங்கேற்பதும் இதனால் சவாலாக மாறியுள்ளது.

இந்தவகையில் கிராஞ்சி, வேரவில் மற்றும் வலைப்பாடு கிராம மக்களின் நீண்டகாலக் கோரிக்கையான இவ்வீதிப் புனரமைப்பு என்பது ஒரு மனிதாபிமானத் தேவையாகும். பல தசாப்தங்களாகத் தொடரும் இந்தப் அவல நிலைக்கு அரசும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் உரிய நடவடிக்கை எடுத்து முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். மக்களின் அடிப்படைத் தேவைகளான கல்வி, சுகாதாரம் மற்றும் பொருளாதார மேம்பாட்டை உறுதி செய்ய, இவ்வீதியைப் போர்க்கால அடிப்படையில் புனரமைப்பது காலத்தின் கட்டாயமாகும்.

# சந்நிதியான் ஆச்சிரம ஞானச்சுடர் வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில், ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில், நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு ஞானச்சுடர் மார்கழி மாத 336 ஆவது மலர் வெளியீட்டு நிகழ்வு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் வெளியீட்டுரையை இளைப்பாறிய கிராம சேவையாளர் சோ. பரமநாதனும், மதிப்பீட்டுரையை இளைப்பாறிய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ.ஸ்ரீகந்த மூர்த்தியும் நிகழ்த்தவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து சிறப்பு பிரதிகளும் வழங்கப் படவுள்ளன.




# சிலாபம் மற்றும் நாத்தாண்டியாவில் வெள்ளம் பாதித்த மக்களுக்கு உதவி!

(கற்பிட்டி நிருபர் சியாஜ்)

புத்தளம் மாவட்டத்தில் உள்ள சிலாபம் மற்றும் நாத்தாண்டியா பகுதிகளில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நேற்று ஐ.சி.ஆர்.சி. மனிதாபிமான அத்தியாவசிய நிவாரணப் பொருள்களை வழங்கும் திட்டத்தை முன்னெடுத்தது.

இந்தத் திட்டத்தின் கீழ், அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சிலாபம் மற்றும் நாத்தாண்டியா பிரதேச செயலர் பிரிவுகளில் வசிக்கும் 500 குடும்பங்கள், மாற்றுத் திறனாளிகளது பராமரிப்பு நிலையங்கள் மற்றும் குழந்தைகள் பராமரிப்பு நிலையங்கள் ஆகியவற்றுக்கு 1,000 படுக்கை விரிப்புகள் மற்றும் 1,000 போர்வைகள் வழங்கப்பட்டன.

சமீபத்திய வெள்ளப் பேரழிவால் கடுமையாக பாதிக்கப்பட்டு, இடம்பெயர்வு மற்றும் குறைபாடான வாழ்விட நிலையில் வாழும் நலிவடைந்த சமூகங்களுக்கு உதவுவதே இந்த முயற்சியின் முக்கிய நோக்கமாகும். குறிப்பாக மாற்றுத் திறனாளிகள் மற்றும் பராமரிப்பு நிலையங்களில் வசிக்கும் குழந்தைகள் ஆகியோருக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு, சமச்சீர் மற்றும் பாகுபாடற்ற மனிதாபிமான உதவிகள் செய்யப்பட்டன.

இந்த நிவாரணத் திட்டத்துக்குக் குவைத் நாட்டைச் சேர்ந்த தனவந்தர்கள் வழங்கிய நிதி உதவியுடன், அல் புன்யான் மற்றும் தன்மியா ஆகிய அமைப்புகள் அனுசரனை வழங்கின. இது இலங்கையின் பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களுடக்கான குவைத் நாட்டின் உறுதியான மனிதாபிமான ஒத்துழைப்பை வெளிக்காட்டுகிறது.

இந்த நிவாரணப் பொருள்கள் விநியோகம், பிரதேச செயலகங்கள் உட்பட சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்களின் முறையான ஒத்துழைப்பால் மேற்கொள்ளப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

ஐ.சி.ஆர்.சியின் இலங்கைப் பிரதிநிதிகள், பேரிடர் காலங்களில் நேரத்துக்குத் தக்க மனிதாபிமான உதவிகளூடாக பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மீட்டெடுத்து, உடனடி நிவாரணத்தை வழங்கி களப்பணியாற்றுவதில் என்றும் முன்னிற்கும் என்பதற்கு இதுவும் ஓர் எடுத்துக்காட்டு.




# பாடசாலை மாணவருக்கு சைக்கிள்கள் வழங்கல்!

## சமூக நலன்புரி நிறுவனத்தின் கல்விப்பணி

( வி.ரி.சகாதேவராஜா)


மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலை, பட்டிப்பளை பிரதேசத்தில் நீண்டதூரம் நடந்து பாடசாலை செல்லும் மாணவர்களுக்கு சமூக நலன்புரி நிறுவனம் சைக்கிள்களை அன்பளிப்புச் செய்துள்ளது.

சைவ மன்றத்தின் நிதி உதவியுடன் சமூக நலன்புரி நிறுவனத்தினால், மூன்றாம் கட்டமாக இந்த உதவி வழங்கப்பட்டுள்ளது.

பட்டிப்பளை பிரதேச செயலகப் பிரிவில் கால்நடையாக நீண்ட தூரம் பயணம் செய்து பாடசாலை செல்கின்ற மாணவர்களுக்கு சைக்கிள்கள் வழங்கும் நிகழ்வு, நேற்று செவ்வாய்க் கிழமை பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

மண்முனை தென்மேற்கு பட்டிப்பளை பிரதேச செயலாளர் எஸ். சுதாகர் முன்னிலையில் மாணவர்களுக்கு சைக்கிள்கள் வழங்கப்பட்டன

இந்த நிகழ்வில் பிரதேச செயலக சிறுவர் மேம்பாட்டு உத்தியோகஸ்தர்கள், அபிவிருத்தி உத்தியோகஸ்தர்கள் மற்றும் நிறுவன உத்தியோகஸ்தர்கள் கலந்துகொண்டனர்.




# மகத்துவம் மிக்க மார்கழியும் மகத்தான திருவெம்பாவையும்



**வித்தகர் விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா, காரைதீவு நிருபர்.**

(திருவெம்பாவை விரதம் நாளை வியாழக்கிழமை ஆரம்பமாகின்றது. சிவபெருமானை நினைந்து வழிபடும் இவ்விரதமானது தொடர்ந்து 10 தினங்கள் இடம்பெற வுள்ளது. ஜனவரி மாதம் 03 ஆம் திகதி திருவாதிரை தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையும்.)

மாதங்களில் மார்கழி மாதம் மகத்துவம் மிக்கது. அது சர்வ சமயத்தினருக்கும் ஆன்மீக வழிபாட்டுக்கும் உரிய முக்கியமான புனித மாதமாகும்.

தமிழ் மாதங்களில் மார்கழி மாதம் ஒன்பதாவது மாதமாகும். இந்த மாதம் முழுவதும் இறைவனுக்கு உகந்ததாகவே போற்றப்படுகிறது.

ஓர் ஆண்டில் பதினொரு மாதங்கள் கோயில்களுக்கு போக முடியாதவர்கள் மார்கழி மாதம் மட்டும் கோயிலுக்கு சென்றாலே வருடம் முழுதும் கோயிலுக்கு சென்ற பலன்கள் கிடைத்துவிடும் என்பது ஐதீகம்.

எல்லா கஷ்டங்களும் நீங்கி, தை மாதத்தில் இருந்து இருந்து புது வாழ்வு கிடைக்க இம்மாதத்தில் பிரார்த்தனை செய்யப்படுகிறது. “பீடு” (பெருமைகள்) நிறைந்த மாதம் என்பது மருவி “பீடை” மாதம் என ஆனது.

ஸ்ரீகிருஷ்ண பகவான் “மாதங்களில் நான் மார்கழி யாக இருக்கிறேன்” என்று பகவத் கீதையில் அருளி யுள்ளார்.

மார்கழி மாதம் முழுவதும் இறைவனை வழிபடுவதால் இந்த மாதத்தில் எவ்வித குடும்ப மங்கள விழாக்கள் பொதுவாக நடத்தப்படுவதில்லை. இந்த மாதம் தேவர்களுக்கு அதிகாலை நேரமாக கருதப்படுகிறது. இந்த மாதத்தில் அதிகாலை நீராடி ஆலய தரிசனம் செய்வது மிகவும் சிறப்பாகும்.

சூரியனின் நகர்வின் அடிப்படையில் இயற்கையாக அமையும் புண்ணிய காலங்கள் உத்தராயண காலமும் தட்சணாயன காலமும் ஆகும். உத்தராயணம் என்றால் வடக்கு என்று பொருள். அயனம் என்றால் பயணம். சூரியன் வடக்கு திசையை நோக்கிய தனது பயணத்தைத் தொடங்கும் நாள், அதாவது தை மாதம் முதல் நாள் உத்தரயண புண்ணிய காலத்தின் தொடக்க நாள் ஆகும். தை மாதம் ஆரம்பிக்கும் உத்தராயணம் ஆனி வரை இருக்கிறது. இந்த ஆறு மாத காலத்துக்குச் சூரியன் வடக்கு நோக்கிப் பயணிக்கிறார்.

இது முடிந்தவுடன் ஆடி மாதம் முதல் நாள் சூரியன்

தொடர்ச்சி▼

# மகத்துவம் மிக்க மார்கழியும் மகத்தான திருவெம்பாவையும்

**தொடர்ச்சி▲**

தென்திசை நோக்கிய தனது பயணத்தைத் தொடங்குகிறார். இதைதட்சிணாயனம் என்று அழைக்கிறார்கள். ஆடி மாதம் முதல் நாள் தெற்கு நோக்கிப் பயணிக்க ஆரம்பிக்கும் சூரியன், அடுத்த ஆறு மாதங்களுக்கு அதாவது மார்கழி மாதம் வரை தெற்கு நோக்கியே பயணிக்கிறார்.

மார்கழியில் தேவர்களுக்கு அதிகாலை. எனவே மார்கழி மாதம் மகத்துவம் மிக்கது.

மார்கழி மாதத்துக்கு ஏராளமான புராண சிறப்புகள் உள்ளன. மார்கழி மாதத்தில் மகாபாரத யுத்தம் நடைபெற்றதாக இதிகாசம் கூறுகிறது. மற்றும் ஆண்டாள் திருமாலை திருமணம் புரிந்ததும், திருப்பாற்கடல் கடையும் போது கிடைத்த விஷத்தை சிவன் உண்டு உலகை காப்பாற்றியதும், இந்திரனால் பெருமழை உருவானபோது கோகுலத்தில் உள்ள அனைவரையும் காப்பாற்ற கோவர்த்தனகிரி மலையை, கிருஷ்ணர் குடையாகப் பிடித்து காப்பாற்றியதும் இந்த மார்கழி மாதத்தில்தான்.

மார்கழி மாத மிருகசீரிட நட்சத்திரத்தில் பிறந்த மார்க்கண்டேயர் மரணத்தை வென்றதாக மார்க்கண்டேய புராணம் குறிப்பிடுகிறது. ஆகையால் ம்ருத்யுஞ்ச ஹோமம் செய்ய இம்மாதம் மிக சிறந்தாகக் கருதப்படுகிறது.

மாணிக்கவாசக நாயனார் திருவெம்பாவையில், "போற்றியாம் மார்கழி நீர் ஆடேலோர் எம்பாவாய்" – என்றும் ஆண்டாள் நாச்சியார் "மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால் நீராடப் போதுவீர் போது மினோ நேரிழையீர்" என்றும், அதிகாலை வழிபாடு மகத்துவம் பற்றி பாடியுள்ளார்கள்.

மார்கழி மாதம் முழுவதும் பெரும்பான்மையான கோயில்களில் திருப்பாவை, திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சி, ஆழ்வார் பாசுரங்கள் பாடப்படுகின்றன.

மார்கழியில் அதிகாலையில் எழுந்து நடக்கும் போது இயற்கை காற்றை சுவாசிப்பதால் மனிதர்களுக்கு ஏற்படும் பல்வேறு நோய்களும் குணமாகும் என்று முன்னோர் அறிந்து கொண்டனர்.

அறிவியலின்படி மார்கழி மாதத்தில் ஆக்ஸிஜன் நிறைந்த ஓசோன் படலம் பூமிக்கு மிக அருகில் அதிகாலை 4.30 மணி முதல் 6.00 மணி வரை இருக்கும். ஓசோன் வாயு நுரையீரலுக்கு சென்று புத்துணர்ச்சி உண்டாக்கும். மார்கழி மாத காற்று சருமத்திற்கும், உடல் நலத்திற்கும் மிகவும் நல்லது என்பதை விஞ்ஞான பூர்வமான ஆராய்ச்சியிலும் தெரியவந்துள்ளது. அதுவே பிரம்ம முகூர்த்தம் எனப்படுகிறது.

மார்கழி மாதத்தில் வாசலில் மிகப்பெரிய கோலம் போட்டு, அதில் வண்ண பொடி தூவுவதும், பூசணிப் பூவினை பசும் சாணத்தில் வைப்பது இன்றும் சம்பிரதாயமாக பின்பற்றப்படுகின்றது. பசும் சாணம் கிருமி நாசினியாகும்.

அந்த காலத்தில் தங்கள் வீட்டில் திருமண வயதுடைய பெண் இருக்கிறாள் என்பதைத் தெரிவிக்கும் அடையாளமாகவே கோலத்தின் மீது பூசணி பூ வைப்பார்கள். அதிகாலையில் வீதியில் பஜனைக்கு வருபவர்கள், அந்த வழியாக செல்பவர்கள் அதனை புரிந்து கொண்டு, மார்கழி முடிந்ததும், தை மாதம் திருமணம் பேசி மணம் முடித்து விடுவார்கள்.

"மார்கழியில் பூசணிப் பூ வைக்க, தை மாதத்தில் திருமணம் கைகூடிவரும் என்பர்". மார்கழி மாதங்களில் வீட்டு முன்பு கோலமிட்டால் மகாலட்சுமி வீடு தேடி வருவார் என்பது நம்பிக்கை. கோலம் போடுவதால் மனதுக்கு உற்சாகம், நினைவாற்றல் கிடைக்கிறது. மனஒருமைப்பாடு இருந்தால் தான் புள்ளிகளைச் சரியாக இணைத்துக் கோலம் போட முடியும். கோலம் இடும் பெண்களின் சிந்திக்கும் திறன் சிறப்பாக இருக்கும் என்றும், நல்ல மனநிலையோடு இருப்பார்கள் என்றும் உடலிலும் மிக நல்ல அதிர்வுகளை ஏற்படுத்துகின்றன என விஞ்ஞான ஆய்வுகள் நிரூபித்துள்ளன.

மார்கழி மாதத்தில் அதிகாலையிலேயே ஆலய வழிபாடு தொடங்கிவிடும். இம்மாதத்தில் திருவாதிரை, வைகுண்ட ஏகாதசி, அனுமந் ஜெயந்தி, பாவை நோன்பு, திருவெம்பாவை நோன்பு, படி உற்சவம், விநாயகர் சஷ்டி விரதம், உற்பத்தி ஏகாதசி போன்ற விழாக்கள், பண்டிகைகள், விரதங்கள் கடைபிடிக்கபடுகின்றன. இம்மாதத்தில் அறுபத்து மூன்று நாயன்மார்களில் வாயில நாயனார், சடைய நாயனார், இயற்பகை நாயனார், மானக்கஞ்சாற நாயனார், சாக்கிய நாயனார் ஆகியோரின் குருபூஜை நடத்தப்படுகிறது.

பன்னிரு ஆழ்வார்களில் தொண்டரடிப் பொடியாழ்வார் ஜெயந்தி இம்மாதத்தில் கொண்டாடப்படுகிறது. ரமண மகிரிஷி, அன்னை சாரதா தேவியார், பாம்பன் சுவாமிகள் ஆகியோர் இம்மாதத்தில் தான் தோன்றினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இதைத்தவிர கிறிஸ்தவர்களின் கிறிஸ்மஸ், புதுவருட பிறப்பு, முகமதியர்களின் பக்ரீத் போன்ற பண்டிகைகள் இம்மாதத்தில் கொண்டாடப்படுகின்றன. புத்த, சீக்கிய மற்றும் சமண மதங்களிலும் இந்த மாதம் புனித மாதமாக கருதப்படுகிறது.

நாமும் ஆன்மிக மலர்ச்சிக்கு சிறந்த மாதமாக கருதப்படும் இந்த மார்கழி மாதத்தில் கடவுள்களை மனதால் துதித்துப் போற்றுவோம்.நற்பேறு பெறுவோம்.

### திருவெம்பாவை

திருவெம்பாவை என்பது மாணிக்கவாசகரால் சைவ சமயத்தின் முழுமுதற்கடவுளான சிவபெருமானைக் குறித்து எழுதப்பட்ட பாடல்களின் தொகுப்பாகும். இந்த திருவெம்பாவை பாடல்களுடன், திருப்பள்ளியெழுச்சி பதிகத்தின் பாடல்களையும் இணைத்து மார்கழி மாதத்தில் பாடுவதை இந்துக்கள் மரபாகக் கொண்டுள்ளார்கள்.

அந்தவகையில், திருவெம்பாவை விரதம் மற்றும் ஊர்வலம் நாளை வியாழக்கிழமை அதிகாலை ஆரம்பமாகின்றது. சிவபெருமானை நினைந்து வழிபடும் இவ்விரதமானது சிவசக்தியின் அருட் செயலையும் நவசக்திகள் ஒன்றுசேர்ந்து சிவபெருமானைத் துதிப்பதும் திருவெம்பாவையின் தத்துவமாகும்.

திருவெம்பாவை தொடர்ந்து 10 தினங்கள் இடம் பெறவுள்ளது. ஜனவரி மாதம் 03 ஆம் திகதி திருவாதிரை தீர்த்தோற்சவத்துடன் நிறைவடைகிறது.

இந்தக் காலகட்டத்தில் பிரம்ம முகூர்த்த வேளையில் ஆலய வழிபாட்டில் ஈடுபடுவதுடன், திருவெம்பாவை ஊர்வலத்திலும் கலந்து கொண்டு எல்லாம் வல்ல சிவபெருமானின் அருளைப் பெறுவது இந்துக்களின் கடமையாகும்.

பெண்கள் அதிகாலையில் நீராடி பாவை நோன்பு நோற்று பெருமாளை வணங்கி திருப்பாவை பாடுகின்றனர். சிவபெருமானின் பக்தைகள் நோன்பு நோற்பதற்காகத் தோழியை துயிலெழுப்பச் செல்லும் காட்சி திருவெம்பாவையிலும் வருகிறது. சிவனுடைய அடியார்களே கணவனாக வர வேண்டும், அவனோடு சேர்ந்து சிவனைத் தொழ வேண்டும் என்பதே திருவெம்பாவையில் வருகிற பாவை நோன்பின் நோக்கமாகும்.

எனவே அத்தகைய மகத்துவம் மிக்க மார்கழி மாதத்தில் மகத்தான திருவெம்பாவை நோன்பை நோற்று வாழ்வில் உய்வோமாக.




# மன்னாரில் சூடு பிடித்துள்ள பண்டிகைக்கால வியாபாரம்

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

நத்தார், புதுவருட பண்டிகை காலத்தை முன்னிட்டு மன்னார் நகர சபை பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் தற்காலிக பண்டிகை கால வியாபார நிலையங்கள் அமைக்கப்பட்டு வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் கடந்த 20 ஆம் திகதி முதல் பண்டிகை கால வியாபார நடவடிக்கைகள் சூடு பிடித்துள்ளன.

மன்னார் நகர சபையால் கேள்வி கோரல் அடிப்படையில் சுமார் 350 இற்கும் மேற்பட்ட வியாபார நிலையங்கள் அமைக்க இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டு வியாபார நடவடிக்கைகள் இடம் பெற்று வருகின்றன.

எதிர்வரும் 31 ஆம் திகதிவரை பண்டிகைக் கால வியாபாரங்கள் இடம்பெறும். உள்ளூர் மற்றும் தென் பகுதி வியாபாரிகள் இடத்தை குத்தகை அடிப்படையில் கொள்வனவு செய்து வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

தற்போது மாவட்டத்தின் பல பாகங்களில் இருந்தும் மக்கள் மன்னார் நகர் பகுதிக்கு வருகை தந்து பொருள்களைக் கொள்வனவு செய்து வருகின்றனர். கடந்த காலங்களை விட இம்முறை அதிகமாக, விற்பனை நிலையங்கள் வைக்கப்பட்டுள்ளன. மன்னார் மாவட்ட மக்கள் ஆர்வத்துடன் பொருள்களைக் கொள்வனவு செய்து வருகின்றனர்.

இதேவேளை, இந்த முறை மன்னார் நகர சபைக்குப் பண்டிகை கால வியாபார நிலையங்கள் அமைக்க இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள மையால் 04 கோடி ஐம்பது லட்சம் ரூபாவுக்கு அதிகமான வருமானம் கிடைத்துள்ளது.

இந்த நிதியானது 2026 ஆம் ஆண்டுக்கான மன்னார் நகர சபை பிரிவுக்கு உட்பட்ட அபிவிருத்தி திட்டங்களுக்காக செலவிடப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.




# கிளிநொச்சி - முல்லை பிரதான பாலத்தில் போக்குவரத்து நேற்று ஆரம்பித்து வைப்பு!

(கற்பிட்டி நிருபர் சியாஜ்)

டித்வா பேரிடர் காரணமாக ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தின் ஏ-35 பிரதான வீதி 11 ஆம் மைக்கல் பகுதியில் அமைந்துள்ள பிரதான பாலம் கடுமையாகப் பாதிக்கப்பட்டது.

இதன் காரணமாக கிளிநொச்சி முல்லைதீவு மாவட்டங்களுக்கான போக்குவரத்துக்கு பெரும் பாதிப்படைந்தது. இதன் காரணமாக கிளிநொச்சி – முல்லைத்தீவுக்கான போக்குவரத்து வட்டக்கச்சி ஊடாகவே மேற்கொள்ளப்பட்டு வந்தது.

இந்த நிலையில் கிளிநொச்சி முல்லைத்தீவுக்கான போக்குவரத்து மீண்டும் நேற்று செவ்வாய்க்கிழமை குறித்த பாலத்தின் ஊடாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பாலத்தின் புனரமைப்பு பணிகள் துரித கதியில் நிறைவடைந்ததை அடுத்து 25 நாள்களின் பின்னர் மீண்டும் இவ்வீதி ஊடான போக்குவரத்து தொடங்கியுள்ளதால் மக்கள் தமது போக்குவரத்து நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்திய இராணுவத்தினர் மற்றும் இலங்கை இராணுவத்தினர், வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் இணைந்து துரித கதியில் பாலத்துக்கான நிர்மாணப் பணிகளை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

குறித்த பாலத்தின் ஊடாக பயணிப்பவர்கள் வீதி சமிக்கைகளை பின்பற்றி அதிக வேகத்தில் வாகனத்தை செலுத்தாது உங்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் இந்தப் பாலம் ஊடாகப் பயணத்தை மேற்கொள்ள வேண்டும் என்று வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் தெரிவித்துள்ளனர்.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெயசங்கர் காணொளி மூலம் இதனைத் திறந்து வைத்திருந்தார்.



# இலங்கையில் பேரிடர் மேலாண்மை...!

இலங்கையில் பேரிடர்கள் பல்வேறு வடிவங்களில் தோன்றி மக்களின் வாழ்வாதாரத்தை பாதித்து வருகின்றன. அரசியல் போராட்டங்கள், பொருளாதார நெருக்கடிகள், பயங்கரவாத தாக்குதல்கள், கொவிட்-19 போன்ற தொற்று நோய்கள் மட்டுமல்லாமல், இயற்கை சீற்றங்களான வெள்ளம், மண்சரிவு, இடி-மின்னல், சுனாமி போன்றவையும் உயிரிழப்புகளையும் உடைமை இழப்புகளையும் ஏற்படுத்தி வருகின்றன.

இத்தகைய பேரிடர்களின் போது அரசாங்கம், தொண்டு நிறுவனங்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் சாதாரண மக்கள் ஒன்றிணைந்து உதவிகளை வழங்கி மனிதநேயத்தை வெளிப்படுத்துகின்றனர். எனினும், பேரிடர் முகாமைத்துவத்தில் ஏற்படும் குறைபாடுகள் மக்களின் துன்பத்தை அதிகரிக்கச் செய்கின்றன. சூழற்காற்று டித்வா நவம்பர் 28 ஆம் திகதி இலங்கையைத் தாக்கியதன் விளைவாக, பரவலான மண்சரிவுகள் மற்றும் வெள்ளப் பேரழிவு ஏற்பட்டு, நாட்டின் கடந்த 20 ஆண்டுகளின் மோசமான வெள்ள நிலைமைகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

அனைத்து 25 மாவட்டங்களிலும் சுமார் 22 லட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். 643 பேர் உயிரிழந்தமை பதிவானது, மேலும் 183 பேர் இன்னும் காணாமல் போயுள்ளனர். 100,000 இற்கும் மேற்பட்ட வீடுகள் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ சேதமடைந்துள்ளன. அவசரகால உச்சத்தில் 2.33 லட்சம் பேர் இடம்பெயர்ந்த நிலையில், டிசெம்பர் 15 நிலவரப்படி இன்னும் சுமார் 70,000 பேர் இடம்பெயர்ந்த நிலையிலேயே இருக்கின்றனர். நாட்டில் 12 லட்சம் மக்களுக்கு மனிதாபிமான உதவி தேவைப்படுகின்றன.

இவர்களில் மிகவும் பாதிக்கப்பட்ட 6.58 லட்சம் பேருக்கு உதவி செய்வதே இலக்காக உள்ளதுடன் ஐக்கிய நாடுகளின் நிரந்தர ஒருங்கிணைப்பாளரின் தலைமையில் குறிவைக்கிறது . நவம்பர் 29 அன்று, இலங்கை ஜனாதிபதி இந்த கடும் தாக்கத்துக்குப் பதிலளிக்கும் வகையில் நாடு தழுவிய அவசர நிலையை அறிவித்து, உடனடி பேரிடர் நிவாரண மற்றும் மனிதாபிமான உதவியைக் கோரினார். வரும் வடகிழக்கு பருவமழை தொடர்ந்து அபாயங்களை உருவாக்குகிறது. மேலும் நாட்டின் சில பகுதிகளில் மேலும் மழைப்பொழிவு கணிக்கப்பட்டுள்ளது, இது வெள்ளம் மற்றும் மண்சரிவு அபாயங்களைத் தொடர்ந்திருக்கச் செய்து, உயர் அபாயப் பகுதிகளில் இடம்பெயர்வை நீடிக்க வைக்கும்.

டிசெம்பர் 11, 2025 அன்று, ஐக்கிய நாடுகளின் நிரந்தர ஒருங்கிணைப்பாளரின் தலைமையில், மனிதாபிமான சமூகம் மனிதாபிமான முன்னுரிமைத் திட்டத்தைத் தொடங்கியது. இது உதவி தேவைப்படும் 12 லட்சம் மக்களில் மிகவும் பாதிக்கப்பட்ட 6.58 லட்சம் பேரைக் குறிவைக்கிறது. இதற்கான நிதித் தேவை 353 லட்சம் அமெரிக்க டொலர்கள் ஆகும். ஐக்கிய நாடுகளின் மைய அவசர நிதி மையம் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உடனடி உயிர்காக்கும் உதவியை ஆதரிக்க 45 லட்சம் டொலர்களை ஒதுக்கியுள்ளது. இடம்பெயர்ந்த சமூகங்களுக்குள் பாதுகாப்புக் கவலைகள் அதிகரித்துள்ளன, குறிப்பாக பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு, கூடுதலாக நிரம்பிய தங்குமிடங்கள், சேவைகள் சீர்குலைதல் மற்றும் நீடித்த இடம்பெயர்வு ஆகியவை பாலின அடிப்படையிலான வன்முறை, சுரண்டல் மற்றும் உளவியல் பாதிப்பு ஆகியவற்றின் ஆபத்துகளை அதிகரிக்கின்றன. வீடுகளுக்கான சேதம் மனிதாபிமான தேவைகளுக்கான முக்கிய காரணியாக உள்ளது. பல குடும்பங்கள் பகுதியாக சேதமடைந்த வீடுகளில் அல்லது தற்காலிக நிலைகளில் வாழ்கின்றனர். இது காலநிலை, சுகாதார அபாயங்கள் மற்றும் பாதுகாப்புக் கவலைகளுக்கு அதிக வெளிப்பாட்டை ஏற்படுத்துகிறது. மேலும், வாழ்வாதாரங்கள் குறிப்பாக நிலைக்குத்து விவசாயம், மீன்பிடி, தினசரி கூலித் தொழிலாளர்கள் மற்றும் சிறு வணிகங்களைச் சார்ந்த குடும்பங்களிடையே கணிசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

பயிர்கள், கால்நடைகள், மீன்பிடி உபகரணங்கள் மற்றும் சிறிய உற்பத்தி சொத்துகளின் இழப்புகள் ஈடுசெய்யும் வழிமுறைகளுக்கு வரையறுக்கப்பட்ட போக்குவரத்துத் திறன் மற்றும் அணுகல் உள்ள ஏழைக் குடும்பங்களை விகிதாசாரத்துக்கு மீறி பாதித்துள்ளன. பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கான அணுகல் சமமற்றதாகவே உள்ளது. மலைப்பாங்கான, மண்சரிவு பாதிப்புள்ள பகுதிகளில், குறுகிய இரண்டாம் நிலை சாலைகளுக்கான சேதம் சில தொலைதூரக் கிராமங்களை அடைவதை கடினமாக்குகிறது. ஒரு கூட்டு விரைவான தேவை மதிப்பீடு சூழற்காற்று டித்வாவுக்குப் பிறகு நடத்தப்பட்டது. இது ஆரம்ப பதில் திட்டமிடலுக்கு தகவல் அளித்தது. மேலும் ஒரு பரந்த இடை அமைப்பு மதிப்பீடு தற்போது நடைபெற்று வருகிறது. இது மாறிவரும் தேவைகள் மற்றும் முன்னுரிமைகளைப் புரிந்துகொள்ள

தொடர்ச்சி▼



# இலங்கையில் பேரிடர் மேலாண்மை...!

தொடர்ச்சி▲

வழிவகுக்கும்.

கனடியத் தமிழ் காங்கிரஸ் வெளியிட்ட அறிக்கையின் படி, மலையகத் தமிழ் சமூகங்கள் பல்லாண்டுகளாக பேரிடர் அபாயமுள்ள இடங்களில் வாழ்ந்து வருகின்றனர். இப்பேரிடர் அவர்களது பொருளாதார பின்னடைவை மேலும் வெளிப்படுத்தியது. அரசாங்கத்தின் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் (DMC) வெளியிட்ட தரவுகளின்படி நாடு முழுவதும் ஆயிரக்கணக்கான வீடுகள் பாதிக்கப்பட்ட போதிலும், சில பிரதேசங்களில் குறிப்பாக நுவரெலியா மாவட்டத்தில் முழுமையாக சேதமடைந்த வீடுகளின் எண்ணிக்கை 15 ஆக மட்டுமே பதிவு செய்யப்பட்டுள்ளமை சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. உண்மையில் மலையகப் பகுதிகளில் நூற்றுக் கணக்கான வீடுகள் முழுமையாக அழிந்துள்ளன என சமூக அமைப்புகள் சுட்டிக்காட்டுகின்றன. இத்தகைய தரவு குளறுபடிகள் நிவாரண விநியோகத்தை பாதிக் கின்றன. கிராம சேவகர்களின் அலட்சியம், பாரபட்சம் மற்றும் அசமந்தப் போக்கு இந்தப் பிரச்சினைகளை மேலும் தீவிரப்படுத்தியுள்ளது என்று குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. பாதிக்கப்பட்ட மக்கள் உடனடி உதவி களைப் பெறுவதில் தாமதம் ஏற்படுகிறது. அரசாங்கம் பாதிக்கப்பட்டோருக்கு பல நிவாரணங்களை அறிவித் துள்ளது. வெள்ளப் பாதிப்புள்ள வீடுகளை சுத்தம் செய்வதற்கு 25,000 ஆயிரம் ரூபா (முன்பு 10,000 ஆக இருந்தது உயர்த்தப்பட்டது).

- பகுதியளவில் சேதமடைந்த வீடுகளுக்கு ரூ. 2,500,000 வரை இழப்பீடு.
- முழுமையாக அழிந்த வீடுகளுக்கு ரூ. 5,000,000 வரை நிவாரணம்.
- உயிரிழந்தோரின் குடும்பங்களுக்கு தனி நிவாரணங்கள்.

எனினும், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இந்த நிவார ணங்கள் போதுமானதல்ல என விமர்சிக்கின்றனர். முழுமையாக அழிந்த வீடுகளுக்கு ரூ. 50 லட்சம், காணி இல்லாதோருக்கு அரச காணி, வீடும் காணியும் இல்லாதோருக்கு ரூ. 1 கோடி வழங்க வேண்டும் என வலியுறுத்துகின்றனர்.

அனர்த்த முகாமைத்துவத்தின் மூன்று கட்டங்கள்

1. அனர்த்தத்துக்கு முன்னரான பாதுகாப்பு – ஆபத்தான இடங்களில் குடியிருப்புகளை தவிர்த்தல், முன்னறிவிப்பு அமைப்புகளை வலுப்படுத்தல்.
2. அனர்த்தின் போதான நடவடிக்கைகள் – உடனடி மீட்பு, பாதுகாப்பான இடமாற்றம்.
3. அனர்த்தத்துக்குப் பின்னரான கட்டியெழுப்பல் – நியாயமான நிவாரண விநியோகம், நிரந்தர வீடமைப்பு.

மலையகத்தில் இந்தக் கட்டங்கள் பலவீனமாக உள்ளமை தொடர்ச்சியான பாதிப்புகளை ஏற்படுத்துகிறது. எதிர்கால பரிந்துரைகளாவன வளிமண்டலவியல் திணைக்களம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை போன் றவை மேலும் திறன் வாய்ந்த முன்னறிவிப்பு அமைப்பு களை அமைக்க வேண்டும். இதரவு சேகரிப்பில் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்தல் கிராம சேவகர்களுக்கு பயிற்சி மற்றும் கண்காணிப்பு, கனடியத் தமிழ் காங்கிரஸ் பரிந்துரைத்தவாறு, மலையகத் தமிழ் சமூகங்களுக்கு நிரந்தர இடமாற்றத் திட்டம் (பாதுகாப்பான மலையக காணிகள் அல்லது வடக்கு – கிழக்கு விருப்ப இடமாற்றம்) அமுல்படுத்தல் மற்றும் நிவாரணங்களை அதிகரித்து, பாரபட்சமின்றி விநியோகித்தல், இலங்கையின் பேரிடர் மேலாண்மை நிறுவனக் கட்டமைப்பு, தொழில்நுட்ப உதவி, நிதி வழங்கல் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு ஆகிய பல முனைகளில் சவால்களை எதிர்கொள்கிறது.

இயற்கையின் சீற்றங்கள் தவிர்க்க முடியாதவையாக இருப்பினும், அவற்றின் தாக்கத்தைக் குறைப்பது மனித நேய ஒத்துழைப்பு மற்றும் திறமையான திட்டமிடலின் கைகளில் உள்ளது. பாதுகாப்பான, நெகிழ்வுத்திறன் மிக்க சமூகத்தைக் கட்டியெழுப்ப, அரசு, தன்னார்வத் துறை மற்றும் ஒவ்வொரு குடிமகனும் தங்கள் பங்கை வகிக்க வேண்டியது அவசியம். வலுவான முன்னெச் சரிக்கை நடவடிக்கைகள், திறமையான நிவாரணம் மற்றும் "மீண்டும் சிறப்பாக கட்டமைப்புகளை உருவாக் குதல்" என்னும் கொள்கையை மையமாகக் கொண்ட மறுகட்டமைப்பு ஆகியவை மனித இழப்புகளையும் பொருளாதாரச் சேதத்தையும் குறைக்க உதவும்.

2024-2025 காலகட்டத்தின் கடுமையான பேரிடர் நிகழ்வுகள், வலுவான முன்னெச்சரிக்கை அமைப்புகள், திறம்பட்ட நிறுவன ஒருங்கிணைப்பு மற்றும் சமூக முனைப்பு ஆகியவற்றின் அவசியத்தை எடுத்துக்காட் டுகின்றன. எதிர்காலத்தில், தொழில்நுட்ப கண்டுபிடிப் புகள், நிறுவன வலுவூட்டல் மற்றும் சமூக விழிப்புணர்வு ஆகியவற்றை ஒருங்கிணைக்கும் ஒரு முழுமையான முறை, இலங்கையை பேரிடர் எதிர்ப்பு தேசமாக உருவாக்கும்.

"பேரிடர் மேலாண்மை என்பது தொழில்நுட்ப மேம்பாடு மட்டுமல்ல, மனிதநேயத்தின் வலுவான அடித்தளத்தில் அமைந்த சமூக ஒப்பந்தமாகும்."

**சரவணன் லக்ஷ்ரன்,**
மெய்யியல் துறை, கலைப்பீடம்,
யாழ். பல்கலைக்கழகம்.





# மாந்தை மேற்கில் இடர் காலத்தில் பணியாற்றிய இளையோர் கௌரவிப்பு

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

நாட்டில் ஏற்பட்ட புயல் மற்றும் வெள்ள அனர்த்தத்தின் போது மன்னார் மாவட்டம் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் பொது பணியில் ஈடுபட்ட இளைஞர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு இடம்பெற்றது.

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பாலை பெருமாள் கட்டு கிராம அலுவலர் அலுவலகத்தில் கிராம அலுவலர் லுமா சிறி தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது.

குறித்த இடர் காலத்தில் மக்களுக்காக களத்தில் நின்று பொது பணியில் ஈடுபட்ட இளைஞர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்கள் கௌரவிக்கப்பட்டதோடு, அவர்களுக்கு உலர் உணவு பொதிகளும் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

குறித்த நிகழ்வில் மாந்தை மேற்கு உதவி பிரதேச செயலாளர், நானாட்டான் பிரதேச சபையின் தவிசாளர், மதத் தலைவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இடர் காலத்தில் தமது உயிரையும் துச்சமென நினைத்து மக்களுக்காக பணியில் ஈடுபட்ட இளைஞர்களை கௌரவித்து அவர்களின் முயற்சியை பாராட்டி கௌரவிக்கும் வகையில் கிராம அலுவலர் லுமா சிறி, எடுத்துக்காட்டாக இந்த நிகழ்வை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.















# மண்முனை தென் எருவில்பற்ற பிரதேச செயலக ஒளி விழா!

(செல்லையா பேரின்பராசா)

மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலக உத்தியோகத்தர்களால் வருடாந்தம் ஒழுங்கு செய்து நத்தப்படும் ஒளி விழா நிகழ்வானது இவ்வருடமும் பிரதேச செயலாளர் உ. உதயஸ்ரீதரின் தலைமையில் கீழ் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் கலந்து சிறப்பித்த அதிதிகளால் மங்கல விளக்கேற்றப்பட்டதைத் தொடர்ந்து பெரிய கல்லாறு புனித அருளானந்தர் ஆலய பங்குத் தந்தை எப்.ஆர். அன்றன் றெறன்ஸின் ஆசிச் செய்தியுடன் இந்த நிகழ்வுகள் யாவும் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இலங்கை கிறிஸ்தவ சபையின் அருட்தந்தை அ. நிரஞ்சனால் ஒளி விழா தொடர்பான விசேட உரை நிகழ்த்தப்பட்டது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு தேசிய கணக்காய்வு அலுவலக கணக்காய்வு அத்தியட்சகர் ரொபட் அலோசியஸ் கலந்து கொண்டார்.

இந்த விழாவில் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலக உத்தியோகத்தர்களால் கரோல் கீதம் இசைக்கப்பட்டது. நாடகம், நடனம் போன்ற பல கலைநிகழ்வுகள் ஆற்றுகை செய்யப்பட்டன. நத்தார் தாத்தா வருகையும் இடம்பெற்றது. அத்துடன் அலுவலக உத்தியோகத்தர்களின் பிள்ளைகளுக்கான பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் திருமதி சத்தியகௌரி தரணிதரன், அலுவலக பதவிநிலை உத்தியோகத்தர்கள் உட்பட அலுவலக உத்தியோகத்தர்கள், இவர்களின் பிள்ளைகள் என பலரும் கலந்து கொண்டனர்.








# டில்லி, மும்பை, கொல்கத்தா, குவாஹாட்டியில் பங்களாதேஷ் தூதரகங்கள் முன்பு போராட்டம்

டில்லி, மும்பை, கொல்கத்தா, குவாஹாட்டி, அகர்தலா, சிலிகுரியில் உள்ள பங்களாதேஷ் தூதரகங்கள் முன்பு நேற்று போராட்டங்கள் நடைபெற்றன. டில்லியில் ஏராளமானோர் திரண்டு, பொலிஸ் தடுப்புகளை உடைத்து முன்னேறியதால் பதற்றம் ஏற்பட்டது.

கடந்த 2024 ஆம் ஆண்டில் பங்களாதேஷில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. அப்போது பிரதமர் பதவியை இராஜினாமா செய்த ஷேக் ஹசீனா இந்தியாவில் தஞ்சம் அடைந்தார். அவரை ஒப்படைக்க வேண்டுமென்று மத்திய அரசிடம் பங்களாதேஷ் இடைக்கால அரசு வலியுறுத்தி வருகிறது. எனினும் ஷேக் ஹசீனாவை பங்களாதேஷில் ஒப்படைப்பது குறித்து மத்திய அரசு எந்த முடிவும் எடுக்கவில்லை.

தற்போது பங்களாதேஷில் முகமது யூனுஸ் தலைமையிலான இடைக்கால அரசு ஆட்சி நடத்தி வருகிறது. அந்த நாட்டில் அடுத்த ஆண்டு பெப்ரவரி 12 ஆம் திகதி பொதுத்தேர்தல் நடத்தப்பட உள்ளது. இந்த தேர்தலில் பல்வேறு மாணவர் சங்கங்கள் உருவாக்கிய தேசிய மக்கள் கட்சி,

வங்கதேச தேசிய கட்சி, வங்கதேச ஜமாத் இ இஸ்லாமி உள்ளிட்ட பிரதான கட்சிகள் போட்டியிடுகின்றன. முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவின் அவாமி லீக் தேர்தலில் போட்டியிட தடை விதிக்கப்பட்டு உள்ளது.

இந்த சூழலில் இன்கிலாப் மஞ்சா என்ற மாணவர் போராட்ட குழுவின் மூத்த தலைவரும், டாக்கா 8 தொகுதியின் வேட்பாளருமான ஷெரீப் உஸ்மான் ஹாடி அண்மையில் மர்ம நபரால் சுட்டுக் கொல்லப்பட்டார். அவரை சுட்டதாக சந்தேகிக்கப்படும் பைசல் கரீம் இந்தியாவில் பதுங்கி இருக்கிறார் என பங்களாதேஷ் சமூக வலைதளங்களில் தகவல்கள் பரப்பப்பட்டன.

இதன் காரணமாக பங்களாதேஷில் வாழும் சிறுபான்மை இந்துக்கள் மீது கொடூர தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றன. கடந்த 18 ஆம் திகதி மைமன் சிங் மாவட்டம், பலுகா பகுதியை சேர்ந்த தீபு சந்திர தாஸ் (வயது 30) அடித்துக் கொலை செய்யப்பட்டார்.

இதைக் கண்டித்து இந்தியாவில் செயல்படும் பங்களாதேஷ் தூதரகங்கள் முன்பு வி.எச்.பி. உள்ளிட்ட இந்து அமைப்புகள் கடந்த சில நாள்களாக போராட்டங்களை நடத்தி வருகின்றன. இதன் காரணமாக டில்லி, மும்பை, கொல்கத்தா, குவாஹாட்டி, அகர்தலா, சிலிகுரி ஆகிய நகரங்களில் உள்ள வங்கதேச தூதரகங்கள் தற்காலிகமாக மூடப்பட்டு உள்ளன.

இந்த சூழலில் விஎச்பி, பஜ்ரங் தளம், சர்வ பாரதிய இந்தி பெங்காலி சங்கம் உள்ளிட்ட அமைப்புகளைச் சேர்ந்த ஏராளமானோர் நேற்று டில்லியில் உள்ள பங்களாதேஷ் தூதரக அலுவலகம் முன்பு குவிந்தனர். அவர்கள் போலீஸ் தடுப்புகளை தாண்டி முன்னேறினர். இதனால் பெரும் பதற்றம் எழுந்தது. போராட்டக்காரர்களை பொலிஸார் கைது செய்து அங்கிருந்து அப்புறப்படுத்தினர். பின்னர் அவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

மேற்குவங்க தலைநகர் கொல்கத்தாவில் உள்ள பங்களாதேஷ் தூதரகம் முன்பு நேற்று பா.ஜ.க. மற்றும் இந்து அமைப்புகளை சேர்ந்த ஏராளமானோர் குவிந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது பொலிஸாருக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. பொலிஸார் தடியடி நடத்தி கூட்டத்தை கலைத்தனர்.

மகாராஷ்டிர தலைநகர் மும்பை, திரிபுரா தலைநகர் அகர்தலா, அசாமின் குவாஹாட்டி, மேற்குவங்கத்தின் சிலிகுரி பகுதிகளில் வங்கதேச கிளை தூதரகங்கள் செயல்படுகின்றன. அந்த தூதரகங்கள் முன்பு பா.ஜ.க, வி.எச்.பி உள்ளிட்ட இந்து அமைப்புகள் சார்பில் நேற்று போராட்டம் நடைபெற்றது. உத்தர பிரதேச தலைநகர் லக்னோ, மத்திய பிரதேச தலைநகர் போபால், காஷ்மீரின் ஜம்மு பகுதி உட்பட நாடு முழுவதும் பல்வேறு இடங்களில் பங்களாதேஷ் அரசை கண்டித்து நேற்று போராட்டங்கள் நடைபெற்றன.






# அசாம் மாநிலத்தில் பெரும் கலவரம் 2 பேர் மரணம்; 58 பொலிஸார் காயம்

அசாம் மாநிலத்தின் கர்பி ஆங்லாங் பகுதியில் நேற்று 2 ஆவது நாளாக பெரும் கலவரம் ஏற்பட்டது. இதில் ஐ.பி.எஸ். அதிகாரிகள் உட்பட 58 பொலிஸார் காயம் அடைந்தனர். இணைய சேவையும் தடை செய்யப்பட்டுள்ளது. இதனால் பதற்றம் நிலவுகிறது.

அசாம் மாநிலத்தில் கர்பி பழங்குடியினரின் அமைப்புகளின் தன்னாட்சி கவுன்சில் எல்லைக்கு உட்பட்ட அரசு மேய்ச்சல் நிலங்களில் பிஹார் மற்றும் நேபாளத்தைச் சேர்ந்த பலர் குடியேறி உள்ளனர். அவர்களை அங்கிருந்து வெளியேற்ற வேண்டும் என்று கர்பி பழங்குடியினத்தவர்கள் நீண்ட காலமாக வலியுறுத்தி வருகின்றனர். தங்களது கோரிக்கைகளை வலியுறுத்தி மேற்கு கர்பி ஆங்லாங்கின் பெலங்பி என்ற பகுதியில் கடந்த 2 வாரங்களாக பழங்குடியினர் 9 பேர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.

அவர்களின் உடல்நிலை மோசம் அடைந்ததை தொடர்ந்து கடந்த திங்கள் கிழமை அவர்களை மருத்துவ சிகிச்சைக்காக பொலிஸார் வலுக்கட்டாயமாக குவாஹாட்டிக்கு அழைத்துச் சென்றனர். இதனால் ஆத்திரம் அடைந்த பழங்குடியினத்தவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்நிலையில், 2 ஆவது நாளாக நேற்று போராட்டம் நடைபெற்றது.

கர்பி பகுதிகளில் இருந்த வாகனங்களை தீ வைத்து கொளுத்தினர். கடைகளில் இருந்து சமையல் காஸ் சிலிண்டர்களை வெளியில் போட்டு வெடிக்க செய்தனர். கலவரத்தை அடக்க வந்த பொலிஸார் மீது அம்புகள் எய்தனர். கற்களை வீசியும் தாக்குதல் நடத்தினர். இதனால் நிலைமை கட்டுக்கடங்காமல் போனது. பொலிஸார் கண்ணீர் புகை குண்டுகள் வீசி கும்பலை கலைக்க முயற்சித்தனர். இதில் 2 பேர் உயிரிழந்தனர்.

அவர்களில் ஒருவர் கர்பி இனத்தைச் சேர்ந்தவர் என்று அடையாளம் காணப்பட்டுள்ளார். கரோனி மார்க்கெட் பகுதியில் பெங்காலி ஒருவர் உயிரிழந்துள்ளார். பொதுமக்களில் எத்தனை பேர் காயம் அடைந்துள்ளனர் என்ற விவரம் வெளியாகவில்லை. மேலும் ஐ.பி.எஸ். அதிகாரிகள் உட்பட 58 பேர் படுகாயம் அடைந்துள்ளனர்.

கலவரம் பெரிதானதால், கர்பி ஆங்லாங் மற்றும் மேற்கு கர்பி ஆங்லாங் ஆகிய 2 மாவட்டங்களில் இணைய சேவை துண்டிக்கப்பட்டது.

# பழனிசாமியின் தலைமையை ஒருபோதும் ஏற்கமாட்டோம்

## ஓ.பன்னீர்செல்வம் திட்டவட்டம்




பழனிசாமியின் தலைமையை ஒருபோதும் ஏற்க மாட்டோம் என அ.தி.மு.க. தொண்டர்கள் உரிமை மீட்புக் கழக மாவட்ட செயலாளர்களுடனான ஆலோசனைக் கூட்டத்தில் முன்னாள் முதல்வர் ஓ.பி.எஸ். தெரிவித்தார்.

சென்னையில் நேற்று நடந்த இக்கூட்டத்தில் ஓ.பன்னீர்செல்வம் உரையாற்றுகையில்,

“எம்.ஜி.ஆர். அ.தி.மு.கவை தொண்டர்களுக்காக உருவாக்கி அமோக வெற்றிபெற்று 3 முறை முதல்வராக பதவி வகித்தார். அதன்பிறகு கட்சிப் பொறுப்பை ஏற்ற ஜெயலலிதாவும் 30 ஆண்டுகளாக அ.தி.மு.கவை கட்டுக்கோப்பாக வழிநடத்தி யாராலும் வெல்ல முடியாத இயக்கமாக தொடர்ந்து முதல்வராக பதவி வகித்தார்.

ஆனால் அதன்பிறகு தொண்டர்கள் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகளை ஒருங்கிணைக்க வேண்டும் என்பதற்காகத் தான் ஒருங்கிணைப்பாளர், இணை ஒருங்கிணைப்பாளர்கள் பதவி உருவாக்கப்பட்டது. ஆனால் திடீரென தனக்கென ஒரு ஆதரவுக் கூட்டத்தை உருவாக்கி, பழனிசாமி தலைமையில் ஒற்றைத் தலைமை இருந்தால்தான் வெற்றி பெறமுடியும் எனக் குரல் எழுப்பி, போலியான பொதுக் குழுவைக்கூட்டி அ.தி.மு.கவை படுபாதாளத்துக்கு பழனிசாமி தள்ளிவிட்டார்.

அவருடைய கட்டுப்பாட்டில் கட்சி சென்ற பிறகு கடந்த எம்.பி. தேர்தலில் 7 இடங்களில் அதாவது 48 சட்டப்பேரவை தொகுதிகளில் டெபாசிட்டை இழந்தது. 14 எம்.பி. தொகுதிகளில் மூன்றாடம் இடத்துக்கு அதிமுக தள்ளப்பட்டுள்ளது. பழனிசாமி வெற்றி பெறுவார் என மாயையை உருவாக்கி விட்டனர்.

தை பிறந்தால் வழி பிறக்கும். தற்போது தொண்டர்கள் எங்கு செல்வது என தெரியாமல் திக்குமுக்காடிப் போய் உள்ளனர். இங்கு பேசிய ராமச்சந்திரன், வைத்திலிங்கம் போன்றோர் பழனிசாமி அங்கம் வகிக்கும் கூட்டணி வேண்டாம் என்றும், பழனிசாமியின் தலைமையை ஏற்க மாட்டோம் என்றும் எரிமலையாக வெடித்துவிட்டு தங்களது உள்ளக் குமுறலை உணர்ச்சி பெருக்குடன் தெரிவித்து சென்றுள்ளனர். அவர்களின் உணர்வுகளை அப்படியே நானும் வழிமொழிகிறேன். பழனிசாமிக்கு பாடம் புகட்டுவோம். மக்கள் நம் மீது மிகுந்த அக்கறையும், நம்பிக்கையும் வைத்துள்ளனர்.” என்று தெரிவித்துள்ளார்.

# துருக்கியில் ஏற்பட்ட விமான விபத்தில் லிபிய இராணுவத் தலைவர் உயிரிழப்பு



துருக்கியில் ஏற்பட்ட விமான விபத்தில், லிபிய இராணுவத் தலைவர் ஹதாத் உள்ளிட்ட மூத்த அதிகாரிகள் உயிரிழந்துள்ளனர்.

வடக்கு ஆப்பிரிக்க நாடான லிபியாவில் கடந்த பல ஆண்டுகளாகவே உள்நாட்டு போர் நடைபெற்று வருகிறது.

அங்கு ஐ.நா, அமெரிக்கா, துருக்கி உள்ளிட்ட நாடுகளால் அங்கீகரிக்கப்பட்ட லிபிய தேசிய இராணுவம் இயங்கி வருகிறது.

துருக்கியின் அங்காராவில் உயர்மட்ட பாதுகாப்பு பேச்சுவார்த்தைக்காக லிபியா தூதுக்குழு சென்றிருந்தது.

இந்த குழுவில் சென்ற லிபிய இராணுவத் தலைவர் முகமது அலி அகமது அல் ஹதாத், துருக்கி பாதுகாப்பு அமைச்சர் யாசர் குலர் மற்றும் துருக்கிய எதிர்தரப்பு செல்குக் பைரக்தரோக்லு மற்றும் பிற துருக்கிய இராணுவத் தளபதிகளை சந்தித்தார்.

இதனையடுத்து, இராணுவ தலைவர் ஹதாத், தரைப்படைத் தலைவர் ஜெனரல் அல்-ஃபித்தோரி கிராய்பில், இராணுவ உற்பத்தி ஆணைய தலைவர் பிரிகேடியர் ஜெனரல் மஹ்மூத் அல்-கடாவ் உட்பட 5 அதிகாரிகள் தனியார் விமானம் ஒன்றின் மூலம் துருக்கி தலைநகர் அங்கராவில் இருந்து புறப்பட்டுள்ளனர்.

விமானம் இரவு 830 மணிக்கு புறப்பட்ட நிலையில், புறப்பட்ட 40 நிமிடங்களில், தகவல் தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து விமானம் விபத்துக்குள்ளான நிலையில், அங்காராவின் ஹேமனா மாவட்டத்தில் உள்ள கெசிக்காவக் கிராமத்திற்கு அருகே விமானத்தின் பாகங்களை அதிகாரிகள் கண்டு பிடித்துள்ளனர்.

இதில், லிபியாவின் இராணுவ தலைவர் ஹதாத் உள்ளிட்ட 5 இராணுவ அதிகாரிகள் மற்றும் 3 விமான குழுவினர் என பயணித்த அனைவரும் உயிரிழந்துள்ளனர்.

லிபியா பிரதமர் அப்துல் ஹமீத் தீப, சமூகவலைத்தள பக்கம் மூலம் தனது இரங்கலை தெரிவித்துள்ளார்.

இந்த விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடைபெற்று வருகிறது.

# முன்னாள் ஐரோப்பிய ஒன்றிய ஆணையருக்கு விசா தடைகளை விதித்தது ட்ரம்ப் நிர்வாகம்





முன்னாள் ஐரோப்பிய ஒன்றிய ஆணையர் ஒருவர் மற்றும் தவறான தகவல்களுக்கு எதிரான செயல்பாட்டாளர்கள் மீது ட்ரம்ப் நிர்வாகம் விசா தடைகளை விதித்துள்ளது.

அமெரிக்க சமூக ஊடக தளங்களை தணிக்கை செய்வதில் ஐரோப்பிய ஒன்றிய ஈடுபட்டுள்ளதாகவும் அமெரிக்கா குற்றஞ்சாட்டியுள்ளது.

இந்த நிலையில், ஐரோப்பிய ஒன்றியத்தின் முக்கிய டிஜிட்டல் சேவைகள் சட்டத்திற்கு எதிராக எதிர்ப்பை உருவாக்குமாறு அமெரிக்கத் தூதர்களுக்கு ட்ரம்ப் நிர்வாக அதிகாரிகள் உத்தரவிட்டுள்ளனர்.

டிஜிட்டல் சேவைகள் சட்டம் என்பது வெறுப்புப் பேச்சு, தவறான தகவல் மற்றும் திரிபுபடுத்தப்பட்ட தகவல்களை எதிர்த்துப் போராடுவதை நோக்கமாகக் கொண்டது. ஆனால், இது கருத்துச் சுதந்திரத்தை நசுக்குகிறது என்றும் அமெரிக்க தொழில்நுட்ப நிறுவனங்களுக்குச் செலவுகளை ஏற்படுத்துகிறது என்றும் ட்ரம்ப் நிர்வாகம் கூறுகிறது.

ஐரோப்பிய தலைவர்கள் பேச்சு சுதந்திரத்தை தணிக்கை செய்வதாகவும், குடியேற்றக் கொள்கைகளுக்கு எதிரான எதிர்ப்பை அடக்குவதாகவும் இந்த மாதம் நிர்வாகத்தின் தேசிய பாதுகாப்பு முகமை கூறியதைத் தொடர்ந்து விசா தடைகள் விதிக்கப்பட்டுள்ளது.

விசா தடைகளால் குறிவைக்கப்பட்ட ஐந்து பேரும் அமெரிக்க தளங்களை அவர்கள் எதிர்க்கும் அமெரிக்கக் கண்ணோட்டங்களைத் தணிக்கை செய்யவும், பணமதிப்பிழப்பு செய்யவும், அடக்கவும் கட்டாயப்படுத்த ஒழுங்கமைக்கப்பட்ட முயற்சிகளுக்கு வழிவகுத்துள்ளனர் என்று வெளிவிவகார செயலாளர் மார்கோ ரூபியோ கூறியுள்ளார்.

இதில் மிகவும் முக்கிய இலக்காக இருந்தவர், 2019 முதல் 2024 வரை ஐரோப்பிய ஒன்றியத்தின் உள்நாட்டுச் சந்தைக்கான ஆணையராகப் பணியாற்றிய பிரெஞ்சு முன்னாள் வணிக நிர்வாகி தியரி பிரெட்டன் ஆவார்.

அமெரிக்காவைச் சேர்ந்த “சென்டர் ஃபார் கவுண்டரிங் டிஜிட்டல் ஹேட்“ அமைப்பின் பிரித்தானிய தலைமைச் செயல் அதிகாரியான இம்ரான் அகமதுவும் ஒருவர். ஜேர்மனியின் Anna-Lena von Hodenberg மற்றும் Josephine Ballon இவர்களுடன் Clare Melford என்பவரும் அமெரிக்காவால் குறிவைக்கப்பட்டுள்ளார்.

கனடா முரசு

பக்கங்கள் - 03

புதன்கிழமை 24/12/2025


கனடாவில் தெரு ஒன்றிற்கு ஏ.ஆர். ரஹ்மானின் பெயர்




C3



# கனடாவில் இந்தியப் பெண் படுகொலை: காதலனுக்கு எதிராக பிடியாணை உத்தரவு

கனடாவின் டொரண்டோ நகரில் வசித்து வந்த ஹிமான்ஷி குரானா என்ற 30 வயதுடைய இந்திய பெண், கடந்த சனிக்கிழமை உடலமாக மீட்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் அவரது காதலரான 32 வயதுடைய அப்துல் கபூரி என்பவரை பொலிஸார் தீவிரமாகத் தேடி வருகின்றனர்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு 10:40 அளவில், ஹிமான்ஷி குரானா காணாமல் போயுள்ளார் என பொலிஸாருக்கு முறைப்பாடு கிடைத்தது.

C2

# யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர் ஒன்டாரியோ விபத்தில் மரணம்

கனடா ஒன்டாரியோவின் தெற்கு – மத்திய யோர்க் பிராந்தியத்தில் ரிச்மண்ட் ஹில் பகுதியில் இரண்டு வாகனங்கள் மோதுண்ட விபத்தில் இலங்கை தமிழர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் யாழ்பாணத்தை பிறப்பிடமாகவும் ரொரன்ரோவை வாழ்விடமாகவும் கொண்ட 65 வயதான நபரே உயிரிழந்துள்ளார்.

இரண்டு வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதிய நிலையில், வீதியால் சென்று கொண்டிருந்தவர்கள் மீது மோண்டுள்ளது.

இந்த விபத்தில் தமிழர் ஒருவர் உயிரிழந்துள்ளார். மேலும் இருவர் காயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என கூறப்படுகின்றது.









# கனடாவில் தலைசிறந்த நகரங்கள் பட்டியலில் முதலிடத்தில் ஒன்ராறியோவின் குவெல்:ப்

2025ஆம் ஆண்டில் கனடாவில் வாழ தலைசிறந்த நகரங்கள் பட்டியலில் குவெல்ஃப் நகரம் முதலிடம் பிடித்துள்ளது.

ஹுழடழ என்னும் ரியல் எஸ்டேட் நிறுவனம், சமீபத்தில், '2025ஆம் ஆண்டில் கனடாவில் வாழ தலைசிறந்த இடங்கள்' பட்டியலை வெளியிட்டது.

2025ஆம் ஆண்டில் கனடாவில் வாழ தலைசிறந்த நகரங்கள் பட்டியலில் முதலிடம் பிடித்துள்ள நகரம், ஒன்ராறியோ மாகாணத்திலுள்ள குவெல்ஃப் ஆகும்.

இந்த பட்டியல், நகரிலுள்ள வீடுகள் விலை, சராசரி வருவாய், குற்றச்செயல் வீதம், ஆண்டுக்கு எத்தனை நாட்கள் சூரிய ஒளி இருக்கும், பாதசாரிகள் நடந்து செல்ல வசதி மற்றும் விலைவாசி ஆகிய காரணிகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளது.

குவெல்ஃப் நகரம், ரொரன்றோவிலிருந்து ஒரு மணி நேர பயணத் தொலைவில் அமைந்துள்ளது.

வரலாற்றுச் சிறப்பு மிக்க கட்டிடங்கள், நல்ல காபி ஷாப்கள், உள்ளூர் கடைகள், இருபுறமும் மரங்கள் நடப்பட்ட நடைபாதைகள் ஆகியவை குவெல்ஃப் நகரின் சிறப்பம்சங்கள் ஆகும்.

ஒன்ராறியோவிலுள்ள மிக பாதுகாப்பான நகரங்களில் ஒன்று குவெல்ஃப் என்பதால், குடியமர ஏற்ற நகரமாக அந்நகரம் கருதப்படுகிறது. குவெல்ஃப் நகரில் வீடுகளின் விலை, 2025 செப்டம்பர் நிலவரப்படி, சுமார் 745,000 டொலர்கள் ஆகும்.

இந்த நகரிலுள்ள குடும்பங்களின் ஆண்டு சராசரி வருவாய், 119,100 டொலர்கள், இங்கு விலைவாசியும் குறைவுதான்.

நீங்கள் தற்போது வாழும் இடத்திலிருந்து ஒரு புதிய இடத்துக்கு குடிபெயர விரும்புவீர்களானால், குவெல்ஃப் நகரம், குடியமர்வதற்கு ஏற்ற, நாட்டின் தலைசிறந்த நகரங்களில் ஒன்று ஆகும்.

---

**கனடாவில்...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதனையடுத்து மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது, சனிக்கிழமை காலை 6:30 அளவில் ஸ்ட்ராச்சன் அவெனியூ பகுதியில் உள்ள குடியிருப்பொன்றில் ஹிமான்ஷி உயிரிழந்த நிலையில் கண்டெடுக்கப்பட்டார்.

டொரண்டோ பொலிஸார் முதற்கட்ட விசாரணையின்படி, இது ஒரு திட்டமிட்ட கொலை என வகைப்படுத்தப்பட்டுள்ளது.

உயிரிழந்த ஹிமான்ஷியும், சந்தேக நபராகக் கருதப்படும் அப்துல் கபூரியும் நெருக்கமான உறவில் இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது அப்துல் கபூரிக்கு எதிராக முதல்தரக் கொலைக் குற்றம் சுமத்தப்பட்டு, கனடா முழுவதும் அவரை கைது செய்வதற்கான பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்தத் துயரச் சம்பவம் குறித்து ரொறொன்ரோவில் உள்ள இந்தியத் தூதரகம் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளது.



# டொராண்டோ பல்கலைக்கழகத்துக்கு அருகே இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் பலி

கனடாவின் டொராண்டோ பல்கலைக் கழக ஸ்கார்பரோ வளாகம் அருகே இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மிலிட்டரி ட்ரெயில் – ஓல்ட் ரிங் ரோடு பகுதியில் கடுமையாக காயமடைந்த ஒருவர் இருப்பதாக வந்த தகவலின் அடிப்படையில் பொலிஸார் சம்பவ இடத்துக்கு சென்றனர் என ஆரம்பத்தில் தெரிவிக்கப்பட்டது.

பின்னர், சம்பவ இடம் ஹைலண்ட் கிரீக் ட்ரெயில் மற்றும் ஓல்ட் கிங்ஸ்டன் ரோடு பகுதியில் இருப்பதாக பொலிஸ் உறுதிப்படுத்தியது.

சம்பவ இடத்தில் துப்பாக்கிச் சூட்டு காயங்களுடன் ஒருவரை பொலிஸார் கண்டுபிடித்தனர் எனவும் பின்னர் அவர் உயிரிழந்தார் என அறிவிக்கப்பட்டது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சம்பவம் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர் என தெரிவிக்கப்படுகின்றது.

பாதிக்கப்பட்ட நபரின் அடையாளம் அல்லது துப்பாக்கிச்சூட்டுக்கான காரணங்கள் குறித்து உடனடியாக எந்த தகவலும் வெளியிடப்படவில்லை.

அவசர மருத்துவ சேவைகள் சம்பவ இடத்துக்கு சென்றிருந்தாலும், எவரையும் மருத்துவமனைக்கு கொண்டு செல்லவில்லை என தெரிவித்துள்ளன.

பல்கலைக்கழக வளாகத்திற்கு அருகிலுள்ள "காடுகளுடன் கூடிய பகுதியில்" துப்பாக்கிச்சூடு நடைபெற்றதாகவும் இதனைத் தொடர்ந்து, டொராண்டோ பொலிஸ்/டன் இணைந்து பல்கலைக்கழகம் உடனடி நடவடிக்கைகளை எடுத்ததாகவும், மாணவர்கள் மற்றும் பணியாளர்களுக்கு எச்சரிக்கை அறிவிப்புகள் அனுப்பப்பட்டன எனவும் கூறப்பட்டுள்ளது.

பாதுகாப்பு காரணங்களுக்காக ஸ்கார்பரோ வளாகம் தற்காலிகமாக மூடப்பட்டிருந்ததுடன், பொலிஸாரின் அறிவுறுத்தலின் பேரில் அந்த முடக்கம் பின்னர் நீக்கப்பட்டது.

# கனடாவில் தெருவொன்றிற்கு வைக்கப்பட்டது இசையமைப்பாளர் ஏ.ஆர். ரஹ்மானின் பெயர்

கனடாவில் உலகப் புகழ்பெற்ற தமிழ் இசையமைப்பாளர் ஏ.ஆர். ரஹ்மானின் பெயரில் தெருவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

கனடாவில் இந்திய வம்சாவளியினர் அதிகம் வாழும் பகுதிகளில், 2 இந்திய பிரபலங்களின் பெயரில் இரண்டு தெருக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இது, இந்திய சினிமா மற்றும் இசையின் உலகளாவிய தாக்கத்தை வெளிப்படுத்தும் ஒரு முக்கிய நிகழ்வாகக் கருதப்படுகிறது.

உலகப் புகழ்பெற்ற இசையமைப்பாளர் ஏ.ஆர். ரஹ்மானின் பெயரில் தெரு அமைக்கப்பட்டுள்ளது.

ரோஜா, உயிரே, ஸ்லம்டாக் மில்லியனேர் போன்ற படங்களின் இசை, மொழி மற்றும் நாட்டின் எல்லைகளைத் தாண்டி உலகளவில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

இளம் தலைமுறையினரிடையே ரஹ்மான் மிகுந்த ஈர்ப்பை ஏற்படுத்தியுள்ளார்.

பிராம்ப்டன், ஒன்ராறியோவில் இந்திய சினிமாவின் 'ஷோமேன்' என அழைக்கப்படும் ராஜ் கபூரின் பெயரில் தெரு மற்றோரு அமைக்கப்பட்டுள்ளது.




அவரது ஆவாரா, ஷ்ரீ 420, மேரா நாம்ஜோக்கர் போன்ற படங்கள், இந்தியாவைத் தாண்டி சோவியத் யூனியன், மத்திய கிழக்கு, வட அமெரிக்கா போன்ற பகுதிகளில் பெரும் வரவேற்பைப் பெற்றன.

பிராம்ப்டன் நகரம், பல்வேறு கலாசார பங்களிப்புகளை மதிக்கும் வகையில், தெரு பெயர்களில் இந்த அங்கீகாரத்தை வழங்கியுள்ளது.

கனடாவில் சுமார் 2.88 மில்லியன் இந்திய வம்சாவளியினர் வாழ்கின்றனர்.

இந்த தெருக்கள், இந்திய சினிமா மற்றும் இசை, அந்நாட்டு நகர வாழ்க்கையின் நிலையான அடையாளமாக மாறியுள்ளதை காட்டுகின்றன.

சுற்றுலா இடங்களாக இல்லாவிட்டாலும், இவை கலாச்சாரச் சின்னங்களாக மதிக்கப்படுகின்றன.

ராஜ் கபூர் மற்றும் ஏ.ஆர். ரஹ்மான் பெயரில் அமைக்கப்பட்டுள்ள இந்த தெருக்கள், இந்திய கலைஞர்களின் உலகளாவிய தாக்கத்தையும், கனடாவின் பல்வேறு கலாச்சாரங்களை மதிக்கும் பாரம்பரியத்தையும் வெளிப்படுத்துகின்றன.